IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருமாலவனின் அர்ச்சாவதார நிலை

**முனைவர்.பி.எஸ்.கணேஷ்மூர்த்தி,**
**உதவிப்பேராசிரியர் திராவிடப்பல்கலைக்கழகம்**
**குப்பம், சித்தூர் மாவட்டம், ஆந்திரமாநிலம்.**

திருமால் பரம், வியூகம்,விபவம்,அந்தர்யாமி , அர்ச்சை என்ற ஐந்து நிலைகளை கொண்டவனாக இருக்கின்றான். இக்கலியுகத்தில் திருமாலவன் நூற்றெட்டு திவ்ய தேசங்களில் அர்ச்சாவதாரமாக இருந்து தன்னை நாடி வரும் அன்பர்களெல்லாம் அருள் பாலித்துவருவதை அறியற்பாலதாகும் பிள்ளைலோகாசாரியர் அருளிய தத்வத்ரய ஈச்வர ப்ரகரணத்தில்
திருமாலவனின்ஸ்வரூபந்தான்பரத்துவம்,வியூகம்,விபவம்,அந்தர்யாமித்வம்,அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாவதாரம் என்று ஐந்து பிரகாரத்தோடு கூடியிருக்கும் என கூறியதை அறியமுடிகிறது. அர்ச்சாவதாரம் என்பது ஒருவனுக்கு தாகம் தணிய பருகலாம்படி பெருக்கெடுத்த ஆற்றிலே தேங்கின மடுக்கள் போலே இவனுக்குஅப்பாற்பட்ட பர,வியூக,விபவ,அந்தர்யாமியாகிய நிலையன்றிக்கே, கோயில்களிலும், வீடுகளிலும் என்று மொக்க எல்லார் கண்ணுக்கும்,இலக்காம்படி நிற்கிற பின்னானார் வணங்கும் சோதி என்பர் மாமுனிகள்.

ஆழ்வார்களுள் முதல்வரான பொய்கையாழ்வார் "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம் தானே " என்று அர்ச்சாவதாரத்தைக் குறிப்பிடுவதை அறியலாம். அதாவதுஅடியார்கள்யாதென்றைத்தங்களுக்குதிருமேனியாகக்கொள்கிறார்களோ அதையே தனக்கு வடிவமாக திருமாலவன் கொள்கிறான் என்றபடி, சேதனர் விரும்பின தங்கம் வெள்ளி முதலான ஏதேனும் ஓர் உலோகத்தில் முன்பு அயோத்தியில் பதினாராயிரம் வருடம் தசரதனும், மதுரையில் நூறுவருடம் வாசுதேவனும் ஆண்டபோது திருமாலவன் முறையே ராமகிருஷ்ண அவதாரங்களைச்செய்ததுபோல் அல்லாமல் இந்த உலகில் உள்ள ஆலயங்களிலும் வீடுகளிலும், ஆச்ரமங்களிலும் ஒரு தேச நியமமில்லாது திருமாலவன் எழுந்தருளியிருக்கிறான், அவ்வாறு எழுந்தருளியிருந்தும் அர்ச்சகர் விரும்பும் காலம் ஒழிய தங்கென்று ஒரு கால நியமம் இல்லாது இருக்கின்றான், எல்லோருக்கும் திருமாலவனிடம் விருப்பம் இருக்குமாகையாலே இன்னார் என்று ஒரு அதிகாரி நியமமும் இல்லாது இருக்கின்றான் அவ்வாறு இருப்பது மட்டுமன்றி அவரவர்கள்செய்யும் குற்றங்களைக் காணாக்கண்ணிட்டு அர்ச்சர்களுக்குப் பரவசபட்ட எல்லா நிலையையும் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையை அர்ச்சாவதாரம் என்பர்.

இந்த அர்ச்சாவதாரத்தில் எல்லாக் குணங்களும் பூர்ணமாக இருப்பதை "ருசிஜநகத்வமும் அபாசரயத்வமும், அசேஷலோக, சரண்யத்வமும், அநுபாவ்யத்வமும், எல்லாம் அர்ச்சாவதாரத்தில் பரிபூர்ணம் " என்று பிள்ளைலோகாசார்யர் கூறியதை அறியமுடிகிறது.

அதாவது சாஸ்த்ரங்களால் திருத்தமுடியாமல் வேறு விவரங்களில் மண்டி பாராமுகராயிருக்கும் சேதனரை திருமாலவன் தன்னுடைய வடிவு,வள்ளல் தன்மை முதலான குணங்களாலே மாற்றுவிக்கிறான், அதனால் தன்னை வணங்குவோரின் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனிதாம் படி திவ்யமங்கள சிலையோடு எழுந்தருளியிருக்கிறான், அவ்வளவு மட்டுமன்றியே தன்னையே உபாயமாக்க் கொள்ளுமளவில் நல்லகுணம் கெட்டகுணம் உடையவர்கள் என்று ஆராயாது எல்லா உலகத்தவர்களும் தன்னைச் சரணமாகப் பற்றும்படி இருக்கிறான், அவர்கள் அவனையே உபாயமாகக்கொண்டு பரமபதத்தில் போய் அனுபவிக்கும் படி இருப்பது மட்டுமன்றியே அவன் பெருமையை அறிந்தவர்களுக்கு "என் அமுதினைக் கண்ட கண்கள்மற்றொன்றினை காணவே" என்று திருப்பாணாழ்வார் ஈடுபட்டபடியே இவ்வுலகிலேயே அனுபவிக்கத்தக்கவாயினும் இருக்கின்றான்.

இவ்வகையில் அர்ச்சாவதாரத்தில்அவனுக்கு குணங்கள் பரிபூரணமாயிரு க்கும். மேலும் இந்த அர்ச்சாவதாரத்தின் பெருமையை பிள்ளைலோகாசார்யர் கூறுகையில் எம்பெருமானின் உடைமையாயிருக்கும் தன்மை ஆத்மாவுக்கு உள்ளது. அந்த ஆத்மாவுக்கு ஸ்வாமியாயிருக்கும் தன்மை எம்பெருமானுக்கு உள்ளது. இவ்வாறு இருக்க, எம்பெருமான் தன் உடைமைகளோடு ஒக்கத்தன்மையும் ஒருபடிப்பட்ட தலைவனாம் தன்மையை சேதனன் பக்கலிலும் , உடைமையாம் தன்மையைத் தன் பக்கலிலுமாகத் தன்னிச்சை யாலே மாறாடிக் கொண்டிருக்கிறான், இப்படிபட்ட எம்பெருமான் எல்லாவற்றையும் அறிந்தவன், எல்லாவற்றினுடைய பிரகாரங்களை அறிந்தவன் என்று அவனது ஸர்வஜ்ஞத்வத்தை முண்டகோப நிட்தமும் இப்படிபட்ட எம்பெருமானுக்கு உயர்ந்ததும் இயற்கையானதுமான ஞானசக்தி முதலானவை அநேகவிதத்தில் இருக்கிறது என்று கேட்கபடுவதாகவும் அந்த ஞானபலங்களின் நியமனமும் இயற்கையானது என்று அவனது ஸர்வசக்தித்வத்தை ச்வேதாச்வதர உபநிடதமும் ,எல்லாருக்கும் பிரபுவானவன், எல்லாவற்றையும் பார்க்கின்றவன், எல்லாவற்றையும் அறிந்தவன், எல்லாவற்றையும் செய்யகூடிய சக்தி உடையவன், அவனே பரமேச்வரன் என்ற பெயரை உடையவன், என்று அவனது நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தை விஷ்ணு புராணமும் கூறுகின்றன. எம்பெருமான் ஸர்வஜ் ஸர்வ சக்தியுடையவனாய் இருக்க்ச்செய்தேயும் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளமாட்டாத அசக்தரைப் போலேயும் தடங்கலற்ற ஸ்வதந்த்ரனாயிருக்கச் செய்தேயும், தனக்கென்று ஒரு முதன்மையில்லாத சுதந்திரமில்லாதவரைப் போலேயும் இருந்தபோதிலும், பாரமுகத்தாரையும் விடமாட்டாது கரைபுரண்டு செல்லுகிற காருண்யம் இட்டவழக்கைக் கொண்டு கண்கொடுத்தல், செல்வம்,மக்கள் கொடுத்தல் முதலாக வீடுபேறு ஈறாக சேதனின் எல்லா விருப்பங்களையும் தலைக்காட்டிக் கொடுக்கிறான்.

மேலும் அர்ச்சாவதாரமானது எல்லாருக்கும் பந்துவாம் தன்மையையும் பக்தர்களிடத்தில் ப்ரீதியையுமிடையதாயிருக்கும், சேதனன் உடைமையாயும் எம்பெருமாந்தான் உடைவனாயும் இருக்கும் இருப்பு முறையாயிருக்கச் செய்தேயும் என்னுடைய கேசவன், ராமன் என்னுடையவன், என்னுடையவன் இந்த வாமனன், அவ்வாரே நரசிம்மன் நாராயணன், கண்ணன் என்று அடியார்கள் சொல்லும் படியாயிருக்கும் அவரவர்களது கிராமத்திலுள்ள எம்பெருமானை தம்தம் பெருமாளாகிற மமாதாபுத்தியை உண்டாக்கும், உயர்ந்த பரம்பொருளான எம்பெருமானை சக்தியற்றவனாகவும் பரதந்த்ரனாகவும் காப்பாற்றத் தகுந்தவனாகவும் நினைக்கவும் செய்யும், பரஞ்சுடர்ச்சோதியான

எம்பெருமான் பக்தர்களிடம் வாத்ஸல்யமுடையவன், அதனால் அடியார்கள் இச்சித்தபோது அமுது செய்வான்,அவ்வாறே ஸ்நானம், பானம்,யாத்ரையும் செய்வான். தான் ஸ்வதந்தரானயிருக்கச் செய்தேயும் பக்தன் எவ்வாறு ஸ்தந்த்வரமற்றவனோ அவ்வாறே எம்பெருமானும் இருப்பான், ஸர்வசக்தியாய் உலகைப் படைக்கச் செய்தேயும் சக்தியற்றவனைப்போல நடப்பான், எல்லா கமங்களையும் கொண்டு ஸ்வாமியாயிருக்கச்செய்தேயும்சக்தியற்றவனைப்போலேபார்க்கபடுகின்றான், அபராதங்களை அறியாதவனாய் எப்போதும் தயையைப் பண்ணிக் கொண்டிருப்பான்.

இவ்வாறு அர்ச்சாவதார விஷயத்தில் எம்பெருமானால் ஒரு சில குணங்களே சொல்லப்பட்டன என்றும் அப்படியே நூறு வருஷங்களானலும் சொல்லுகைக்கு முடிவில்லை என்றும், எம்பெருமான் அநுக்ரஹமும் ஞானமும் கண்டல்லது சொல்லமுடியாது என்றும் இப்படி ஐந்து ப்ர்காரமாயிருக்கும் எம்பெருமான் பிறவியில் கீழ் விழுகிற ஆத்மாக்களுக்கு கீழ் கீழ் இருந்த நிலைகளைக் காட்டிலும் மேன்மேலும் ஸௌலப்யத்தாலே உயர்ந்தவனாய் இருப்பான் என்றும், உலகுக்குத் தலைவனான தான் ஸௌலப்யத்தாலே மேன்மேலும் சுலபன் என்றும் எல்லாவற்றையும் மிகைப்படுத்தும் எம்பெருமானின் ஆறுகுணங்கள் மந்தரத்தில் பொருள் வடிவிலும் பிம்பங்களில் நித்யமாய் க்ருபையாலும் அமைந்து இருக்கிறது என்றும் விஷ்வக்ஸேன ஸம்ஹிதையில் எம்பெருமான் தாமே அருளியது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய பெருமை பொருந்தியதும் ஸௌலப்யத்துக்கு எல்லை நிலமானதுமான அர்ச்சாவதாரத்தில் ஆழ்வார்கள் திருமாலவனின் பெருமையினை நாலாயிரதிவ்யபிரபந்தத்தின் மூலமாக உலகிற்கு அருளினார்கள். பன்னிரு ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார்

அர்ச்சாவதாரத்திலே மிகவும் ஈடுபாடு கொண்டு நூற்றெட்டு திவ்யதேசங்களில் என்பத்திநான்கு திவ்யதேசங்களை நேரில் சேவித்து திருமாலவன் மீது பாசுரங்கள் அமைத்தது அறியற்பாலதாகும். நம்மாழ்வாரும் நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணன் மேலும் திருமாலவனிடத்தில் சரணாகதி அடைந்ததை “ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய் என்றும் கழல்களவையே சரணாகக்கொண்ட என்றும் நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்”என்றும் நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்றும் நான்குமுறை ப்ரபத்தி செய்தும், அலர்மேல்மங்கையுறை மார்பனான திருவேங்கடத்து எம்பெருமானிடம் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே என்று திருமாலவனிடத்தில் முழுவதுமாக சரணாகதி அடைந்ததை அறியமுடிகிறது.

திருமாலவன் எழுந்தருளியிருக்கும் நூற்றெட்டு திவ்ய தேசங்களில் வைகுந்ததேசமான பரமபதம்,பார்கடலை தவிர்த்து மீதமுள்ள 106 திவ்ய தேசங்களில் அர்ச்சாவதாரமாக திருமாலவன் அடியார்களுக்கு காட்சி கொடுப்பதை அறியலாம். இராமபிரானுக்கு அணில் சேவையாற்றியது போல நூற்றெட்டு திவ்ய தேசங்களில் இரண்டாவதாக அர்ச்சாவதாரமாக இடம் பெறும் திருவேங்கடம்(திருப்பதி) திருவேங்கடவன் திருவருளால் அடியேனும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் நிறுவனத்தில் ஆழ்வார் திவ்ய பிரபந்த பிராஜெக்ட்டில் சிறப்பு அதிகாரியாக ஓராண்டுக்கால சேவையில் கன்னியாகுமரி முதல் புதுடில்லி வரை ஆழ்வார்கள் ஆசாரியர்கள் அவதார உற்சவங்கள் நடத்தும் பாக்கியமும் அவனது திவ்யதேசங்களை காணும் வாய்ப்புக்கிடைத்தது அதுமட்டுமின்றி தெலங்கானா மாநிலத்திலுள்ள கம்மம்மாவட்டம்பத்ராசலம்அருகிலுள்ளகாட்டுப்பகுதிக்குஇராமபிரானும்,சீதையும்,லட்சுமணன்சென்ற(இராமாயணத்தில்குறிக்கப்படும்தண்டகாரண்யம்(அடர்ந்தக்காட்டுபகுதி)தென்பகுதியைஅடியேன்சென்றுகாணும்பாக்கியம்பெற்றேன்.அவனதுதிவ்யதேசங்களைஇக்கட்டுரையைவாசிக்கும்ஆர்வலர்கள் அர்ச்ச்சாவதாரத்தை போற்றிய ஆழ்வார்களது நாலாயிரத்திவ்ய பிரபந்த பாசுரங்களை அனுபவிக்கும்படி வேண்டுகிறேன்.